ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2457/34 - 2025 ඔක්තෝබර් මස 10 වැනි සිකුරාදා - 2025.10.10

*2457/34 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### 2021 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினாலும், 2019 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினாலும், 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1976 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டம்

2021 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினாலும், 2019 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினாலும், 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1976 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 4(அ) 1 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நகர அபிவிருத்தி நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக்க ஆகிய நான், சப்பிரகமுவ மாகாணத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களினதும் இணக்கத்துடன், இங்கு கீழ்க் காணும் முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் எல்லைகளுள் அடங்குகின்ற, நீர் வழிந்தோடும் அல்லது நீர் வழிந்தோடுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ள அல்லது நீர் வழிந்தோடுவதை நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள அல்லது இயற்கையாக அமையப் பெற்றுள்ள, அனைத்து கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள் மற்றும் நீரேந்து கால்வாய்களின் இருமருங்கினதும் வரப்பு எல்லையிலிருந்து அக்குறித்த கால்வாய்களின் மேற்பரப்பு அகலத்தை நேரொத்ததாக இங்கு கீழ்க் காணும் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தூரங்களை, கால்வாய் ஒதுக்கங்களாக நிச்சயித்து பிரகடனம் செய்கின்றேன். இக் கால்வாய் ஒதுக்கப் பிரதேசங்களில் ஏதேனும் நிரந்தர அல்லது தற்காலிக மற்றும்/ அல்லது வேறு எந்த விதத்திலானதுமான கட்டிடங்கள் அல்லது கட்டமைப்புகள் நிர்மாணிக்கப்படக்கூடாதென்பதுடன், இக்கால்வாய் ஒதுக்கப் பிரதேசங்களில் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளும் போது, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் விதிக்கப்படுகின்ற இங்கு மூன்றாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மற்றும்/

1A - PG 7281 — 103 (2025/10)

அல்லது இனிவரும் காலங்களில் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு அக்குறித்த கூட்டுத்தாபனத்திடமிருந்து உரிய, எழுத்துமூல அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**அநுர கருணாதிலக்க** (பா.உ.),
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு,
"செத்சிறிபாயா",
பத்தரமுல்லை,
2025.10.01.

**முதலாம் அட்டவணை**

வடக்கு : குருநாகல், கண்டி, பதுளை, நுவரெலியா ஆகிய நிருவாக மாவட்ட எல்லைகளுள் அமைந்துள்ள நிலப்பகுதிகள் ;
கிழக்கு : கண்டி, நுவரெலியா, பதுளை, மொணறாகலை, ஹம்பாந்தோட்டை ஆகிய நிருவாக மாவட்ட எல்லைகளுள் அமைந்துள்ள நிலப்பகுதிகள் ;
தெற்கு : ஹம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை ஆகிய நிருவாக மாவட்ட எல்லைகளுள் அமைந்துள்ள நிலப்பகுதிகள்;
மேற்கு : மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, ஹம்பாந்தோட்டை, கம்பஹா ஆகிய நிருவாக மாவட்ட எல்லைகளுள் அமைந்துள்ள நிலப்பகுதிகள்.

மேற்படி எல்லைகளினால் சூழப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தினுள் அமைந்துள்ள, நீர் வழிந்தோடும் அல்லது நீர் வழிந்தோடுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ள அல்லது நீர் வழிந்தோடுவதை நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள அல்லது இயற்கையாக அமையப் பெற்றுள்ள, அனைத்து கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள் மற்றும் நீரேந்து கால்வாய்கள்.

**இரண்டாம் அட்டவணை**

| *கால்வாயின் மேற்பரப்பு அகலம் (மீற்றர்)* | *கால்வாய் வரப்பு எல்லையிலிருந்து ஒதுக்கம்* | |
|---|---|---|
| | *திறந்த கால்வாய்களுக்காக (மீற்றர்)* | *மேற்பரப்பு மூடப்பட்ட கால்வாய்களுக்காக (மீற்றர்)* |
| 1.0 - 1.2 வரை | 1.0 | 0.3 |
| 1.3 - 3.0 | 2.0 | 1.0 |
| 3.1 - 4.5 | 2.75 | 1.0 |
| 4.6 - 6.0 | 3.5 | 1.5 |
| 6.1 - 9.0 | 4.5 | 1.5 |
| 9.0 இற்கு மேல் | 6.5 | 2.0 |

மேற்படி அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு கால்வாய்களின் மேற்பரப்பு அகலத்தை நேரொத்ததாக தூர அளவுகளை, கால்வாயின் இருமருங்கினதும் வரப்பு எல்லையிலிருந்து கால்வாய் ஒதுக்கமாக இடுதல் வேண்டும்.

மேற்குறித்த ஒதுக்கங்கள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை மகாவலி அதிகார சபை, கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களினாலும், அரசாங்கக் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தூர அளவுகள், இப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்க அளவுகளிலும் பார்க்க கூடியதாக இருக்கும் பட்சத்தில், அந் நிறுவனங்களினால்/ அரசாங்கக் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஒதுக்கங்களை இடுதல் வேண்டும்.

**மூன்றாம் அட்டவணை**

**நிபந்தனைகளும் விதிகளும்**

(அ) இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் எழுத்து மூல அங்கீகாரம் இன்றி, கால்வாய் ஒதுக்கமொன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்ட கால்வாய் ஒதுக்கப் பிரதேசத்தினுள் எந்த விதத்திலானது

மான கட்டிடங்களோ அல்லது கட்டமைப்புகளோ நிர்மாணிக்கப்படவோ மற்றும் / அல்லது காணி மீட்டலொன்றை (நிரப்புதல்) செய்யவோ கூடாது.

(ஆ) இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு, ஆகக் குறைந்த கால்வாய் ஒதுக்க அளவு களத்தில் காணப்படுதல் வேண்டும்.

(இ) இங்கு கால்வாய் ஒதுக்கமொன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்ட கால்வாய் ஒதுக்கப் பிரதேசத்தினுள் உள்ள ஏதேனும் கால்வாயுடன், கூட்டுத்தாபனத்தின் அனுமதியின்றி மழைநீர் வடிகால்களை இணைத்தல் கூடாது என்பதுடன், இக் கால்வாய்களில் மலசலங்கள், கைத்தொழிற்சாலை கழிவுகள் அல்லது வேறு எந்தவொரு மாசு கழிவுப் பொருளையும் போடவோ அல்லது வெளியேற்றவோ அவ்வாறு செய்வதற்கு ஆவன செய்யவோ கூடாது.

(ஈ) எந்தவொரு மாற்றுவழியும் இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டும், கால்வாய் ஒதுக்கங்களை நுழைவு வீதியாகப் பாவிக்க முடியுமெனினும், அந்த வீதியில் கற்களைப் பதித்து தார் போடவோ அல்லது கொங்கிறீட் போடவோ அல்லது வேறு விதத்தில் வீதியை செப்பனிடவோ கூடாது.

(உ) அவ்வாறான கால்வாயொன்றின் ஒதுக்கப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள நிலப்பகுதியொன்றை வர்த்தக நடவடிக்கைகளுக்கோ அல்லது வேறு எந்தவொரு பணிகளுக்காகவோ, தனிநபரொருவரினால் அல்லது சங்கமொன்றினால் அல்லது நிறுவனமொன்றினால் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் குத்தகைக்கு வழங்கப்படுதல் கூடாது.

(ஊ) கால்வாய் ஒதுக்கமொன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தினுள் வாகனங்களை நிறுத்தி வைத்தல், வாகனத் தரிப்பிடமாகப் பாவித்தல் அல்லது வாகனங்கள் திருத்தும் இடமாகப் பாவித்தல் கூடாது என்பதுடன், காணிப் பகுதிகளை பயிர்ச் செய்கை நடவடிக்கைளுக்காகப் பாவித்தலும் கூடாது.

(எ) கால்வாய் ஒதுக்கமொன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தினுள் எந்தவொரு காரியத்தைச் செய்யும் போதும், அதற்காக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எழுத்துமூல முன் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(ஏ) இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரினால், சட்டத்தின் நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும், குறித்த பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன், எந்தவொரு நபரும் அதற்கு இடையூறு விளைவிப்பதானது கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் அவர் குற்றவாளியாக்கப்படுவதற்கான குற்றமாகும்.

(ஐ) இந் நிபந்தனைகளுக்கும், விதிகளுக்கும், ஏற்ப செயற்படுவதை மீறும் எந்தவொரு நபரும் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் கருதப்படுவார்.

(ஒ) இது தொடர்பில் தற்போது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், விதிகளுக்கும், அதே போன்று காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

EOG 10-0112

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.